03.02 இவ் வேலைத்திட்டத்திற்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி, வங்கிச் சங்கம், மாவட்டம் மற்றும் தேசிய மட்டம் வரை அந்தந்த பிரிவுகளினால் எதிர்ப்பார்க்கப்படும இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு வைப்புத் தொகையினை சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு அவை அடையப்படல் வேண்டும். சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளினால் கிராமசேவகர் பிரிவுகளுக்கான எதிர்ப்பார்க்கப்படும் வைப்புத் தொகைக்கான இலக்குகள் வழங்கப்படல் வேண்டும்.

03.03 ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியும் குறைந்தது 50 புதிய சிறுவர் கணக்குகளை திறப்பதற்கு திட்டமிடல் வேண்டும். அதேபோல் புதிதாக திறக்கப்படுகின்ற மற்றும் ஏற்கனவே செயற்பாட்டில் உள்ள சிறுவர் கணக்குகளில் வைப்பாக குறைந்தது ரூபா 300,000/= தை சேகரித்தல் வேண்டும். இருப்பினும் ஏதேனும் ஒரு வங்கியின் அதிகாரப் பிரதேசத்தினுள் கிராம சேவகர் பிரிவுகள் 10 தை விட குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு குறைந்தது 04 புதிய சிறுவர் சேமிப்பு கணக்குகளையும் ஒரு பிரிவுக்கு சிறுவர் சேமிப்பாக குறைந்தது ரூபா 25,000/= வையும் இலக்காக திட்டமிட்டுக் கொள்ள முடியும். இங்கு ஒட்டு மொத்த வங்கியினது எதிர்பார்த்த இலக்கை கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கைக்கு அமைய தீர்மானித்துக் கொள்ள முடியும்.

03.04 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள அனைத்து வங்கிகளினதும் எதிர்பார்த்த இலக்குகளின் கூட்டுத்தொகை வங்கிச் சங்கத்தின் இலக்காக அமையும். அவ் இலக்குத் தொகையினைத் தாண்டி புதிய கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் மற்றும் வைப்புகளை திரட்டுவதற்கும் தேவையான உதவிகளை வங்கிகள் வழங்க வேண்டும்.

03.05 ஒவ்வொரு மாவட்டத்தினதும் அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள எதிர்ப்பார்த்த இலக்குகளினதும் கூட்டுத் தொகை மாவட்டத்தின் இலக்காக அமையும். இவ் இலக்கினை அடைந்து கொள்வதற்கு உத்தியோகத்தர்களை வழி நடத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 4. பரிசுகள் வழங்குதலும் மற்றும் செலவு செய்தலும்

04.01 குறித்து ஒதுக்கப்பட்ட காலத்தினுள் ரூபா 500/= அல்லது அதற்கு கூடிய தொகையினை சேமிப்புதவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்க முடியும்.

இங்கு ஒவ்வொரு வங்கியும் சேமிக்கும் மொத்த வைப்புத் தொகையில் அண்ணளவாக 5% க்கு மேற்படாத தொகையினை பரிசுப் பொருட்களுக்காக வங்கி நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள முடியும். இச் செலவுகளை மேற்கொள்ளும் போது **செலவுக் கணக்கு – வங்கி மேம்பாட்டு நடவடிக்கைகள் கணக்கில் பற்று வைக்கவும்.**

04.02 வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுப் பொருட்கள் வங்கிக் கட்டுப்பாட்டுச் சபையின் இணக்கப்பாட்டுடன் தெரிவுசெய்யப்படல் வேண்டும் இப்பரிசுப் பொருட்களின் கொள்வனவுகள் நிதி ரீதியான வெளிப்படைத் தன்மை ஏற்படக் கூடிய விதத்தில் பெறுகை நடவடிக்கைகளை பின்பற்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். இங்கு வைப்புத் தொகை மற்றும் வயதுப் பிரிவுக்கு அமைய இணைப்பு இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரயோசனமான பரிசுப் பொருட்களை வழங்குவதை கருத்திற் கொள்ளவும்.

04.03 சிறுவர் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பாக சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பாடசாலை மட்டத்தில் தெளிவுபடுத்துவதற்கான துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பெனர் காட்சிப்படுத்தலுக்காக ரூபா 3000/= க்கு மேற்படாத தொகையினை வங்கி நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள முடியும்.

**05. முன்னேற்ற அறிக்கைககள் பெற்றுக் கொள்ளல்.**

**05.01** **இணைப்பு இலக்கம் 02** இல் உள்ள படிவத்தினைப் பயன்படுத்தி வங்கிகள் **2017.10.31** ஆம் திகதிக்கு முன்னர் வங்கிச் சங்கத்துக்கு முன்னேற்ற அறிக்கையினை அனுப்பிவைக்க வேண்டும். வங்கிச் சங்கம் **இணைப்பு இலக்கம் 03** இல் உள்ள படிவத்தினை பயன்படுத்தி **2017.11.07** ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையினை தயார் செய்து மாவட்ட சமுர்த்தி காரியாலயத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**05.02** **இணைப்பு இலக்கம் 03** இல் மாவட்ட முன்னேற்ற அறிக்கையினை மாவட்ட சமுர்த்தி காரியாலயம் தயார் செய்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் ஒப்பத்துடன் குறுநிதிப் பிரிவுக்கு **bank@divineguma.gov.lk** என்னும் மின்னஞ்சல் முகவரியூடாக **2017.11.14** ஆம் திகதிக்கு முன்னர் கட்டாயமாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**06.** சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் / வங்கிக் சங்கங்களுக்கான மதிப்பீட்டு மற்றும் தரப்படுத்தல் **(Grading)** செயற்பாடுகளின் போது இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் முன்னேற்றமும் கருத்தில் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நீல் பண்டார ஹப்புஹின்ன**
**பணிப்பாளர் நாயகம்**

**பிரதி :-**

**01.** செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - தகவலுக்காக.
**02.** சகல மாவட்ட செயலாளர்களுக்கும் - தகவலுக்காக.
**03.** சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காக.
**04.** சகல பிரதேச செயலாளர்களுக்கும் - தகவலுக்காக.
**05.** பிரதம உள்ளக கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - தகவலுக்காக.
**06.** பணிப்பாளர், சமூக அபிவிருத்தி - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - தகவலுக்காக.

Translated by : I.Aliyar

**இணைப்பு – 01**

**2017 ஒக்டோபர் 01 சர்வதேச சிறுவர் தினத்துடன் இணைந்ததாக செயற்படுத்தப்படும் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்கான பரிசுப் பொருட்களை அறிமுகம் செய்தல்.**

| வைப்புத் தொகையின் அளவு (ரூபா) | பாடசாலை செல்வோர் (5 வயதுக்கு மேல்) | | பாடசாலை செல்லாதோர் (5 வயதுக்கு கீழ்) | |
|---|---|---|---|---|
| | பரிசுப் பொருள் | செலவு (ரூபா) | பரிசுப் பொருள் | செலவு (ரூபா) |
| 500-1000 வரை | பேனாவுடன் உண்டியல் | 50 | உண்டியல் | 50 |
| 1001-5000 வரை | தண்ணீர் போத்தல் | 125 | Toys | 100 |
| 5001-10,000 வரை | கொம்பாஸ் பெட்டி | 200 | Caps | 200 |
| 10,001-15,000 வரை | குடை | 400 | குடை (சிறுவர்) | 350 |
| 15,001-25,000 வரை | Hot & Cool Bottle | 500 | Hot & Cool Bottle | 500 |
| 25,001-50,000 வரை | பாடசாலை புத்தகப்பை | 1000 | முன்பள்ளி செல்வோருக்கு புத்தகப்பை ஒன்றும் ஏனைய சிறுவர்களுக்கு பொருத்தமான பரிசும் | 1000 |
| 50,001-100,000 வரை | Table Lamp | 1200 | Table Lamp | 1200 |
| 100,000 க்கு மேல் | Table Fan | 3500 | Table Fan | 3500 |

**இணைப்பு - 02**

**2017 ஒக்டோபர் 01 சர்வதேச சிறுவர் தினத்துடன் இணைந்து செயற்படுத்திய சிறுவர் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்ட முன்னேற்ற அறிக்கை.**

……………………சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி,

| விடயம் | கணக்குகளின் எண்ணிகை | சேகரித்த வைப்புத் தொகை (ரூபா) * | வேறு |
|---|---|---|---|
| புதிதாக திறந்துள்ள | | | |
| தற்போது செயற்பாட்டில் உள்ள கணக்குகளில் வைப்பு சேகரித்த | | | |
| மொத்தம் | | | |

* ஒவ்வொரு இலக்கின் பொருட்டும் சேகரித்த வைப்புத் தொகையினை குறிப்பிடல் வேண்டும்

**இணைப்பு - 03**

**2017 ஒக்டோபர் 01 சர்வதேச சிறுவர் தினத்துடன் இணைந்து செயற்படுத்திய சிறுவர் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்ட முன்னேற்ற அறிக்கை.**

……………………சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் / மாவட்டம்,

| வங்கிகளின் பெயர் | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட | | தற்போது செயற்பாட்டில் உள்ள கணக்குகளில் சேகரித்த வைப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | கணக்குகளின் எண்ணிக்கை | சேமித்த பணத்தின் தொகை (ரூபா) | கணக்குகளின் எண்ணிக்கை | வைப்புத் தொகை (ரூபா) | கணக்குகளின் எண்ணிக்கை | வைப்புத் தொகை (ரூபா) |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

* சேமிப்பு தொகையின் அடிப்படையில் கூடிய தொகையில் இருந்து குறைந்த தொகை வரை வரிசைப்படுத்தலின் பிரகாரம் அறிக்கையினை தயாரிக்கவும்.